**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண். 115/2023**

**07.02.2025**

**வா.சா. 3 - ஆறுமுகம்**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை:-**

எனக்கு வாதிகளை தெரியும். அவர்கள் எனது உறவினரா என்றால் எனது ஊர்க்காரர். நான்கு வீடு தள்ளி அவர்கள் வீடு உள்ளது. எந்த சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் வசிக்கும் வீடு அமைந்துள்ள இடத்திற்கும் வீட்டின் பின்புறம் அமைந்துள்ள காலி இடத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி வீடு கட்டியுள்ள இடத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது காலி மனை அமைந்துள்ள இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வீடு கட்டியுள்ள இடத்திற்கு அரசு பட்டா கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியும். வீட்டின் பின்புறம் அமைந்துள்ள காலி மனைக்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். பட்டா எண்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பட்டா பெற்றுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். வழக்கில் பட்டா தாக்கல் செய்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வழக்கு தாக்கல் செய்த போது நானும் உடன் வந்திருந்தேன். வெம்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து காவல் துறையினருடன் வந்து வீட்டின் பின்புறம் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றிவிட்டு சென்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதியின் ஆக்கிரமிப்பு அல்லாத பிற ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டு சென்றார்களா என்றால் ஆமாம். என்னுடைய வீட்டின் பின்புறமும் ஆக்கிமிரப்புகளை அகற்றினார்கள் என்றால் ஆமாம். எங்கள் ஊரைச் சார்ந்த கோதண்டம் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கோதண்டம் இந்நீதிமன்றத்தில் அவரது வீட்டின் பின்புறம் உள்ள இடத்தில் உள்ள

ஆக்கிரமிப்புகளை அகற்றக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அந்த வழக்கின் தீர்ப்பு கோதண்டம் என்பவருக்கு எதிராக அமைந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வாதி கிரையம் பெற்ற அவரது வீடு அமைந்துள்ள இடத்திற்கு மட்டும் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றாலும் வீட்டின் பின்புறம் உள்ள காலிஇடங்கள் புறம்போக்கு இடம் என்பதால் மற்றும் அவர் ஆக்கிரமித்து இருந்ததால் அந்த இடத்திற்கு பட்டா கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருந்த போதே ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் அகற்றினார்கள். வாதியின் பட்டா இடத்தை மட்டும் விட்டுவிட்டு ஆக்கிரமிப்பு செய்திருந்த இடம் குறித்து ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டார்கள் என்றாலும் எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.